<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை  திரு. பா. கௌதமன்,பி.ஏ., பி.எல்.,</u>

<u>முதன்மை உதவி அமா்வு நீதிபதி</u>

அ. சா. 6 நாள்.21.12.2021

| | | | |
|---|---|---|---|
| அமா்வு வழக்கு எண். | 147/2017 | | |
| பெயா் | கோவிந்தராஜ் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பாலையூா் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றய போது கடந்த 26/02/2016 அன்று 22 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது ரகுவா்மா என்பவா் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 29/2016 சட்ட பிரிவுகள் 341, 294(பி) 352, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ சா ஆ 3. 23 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சிகள் ஜெயராஜ், குணசேகா் ஆகியோா் முன்நிலையில் பாா்வையிட்டு பாா்வை மகஜா், மாதிரி வரைபடம் தயாா் செய்தேன். மாதிரி வரைபடம் அ சா ஆ 4. சாட்சிகள் ரகுவா்மா, சேகா், நிா்மலா, இளங்கோவன், ஜெயராஜ், குணசேகா் ஆகியோரை விசாாித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னா் வழக்கின் மேல் விசாரணையை ஆய்வாளாிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளா் என்னை விசாாித்தாா்.

<u>குறுக்கு விசாரணை</u>

ஆய்வாளா் என்னை விசாாித்தாா். ஆய்வாளா் விசாாித்த போது நான் ஏற்கனவே 1 முதல் 6 பட்டியல் சாட்சிகளை விசாாித்து வாக்குமூலம் பெற்ற விபரத்தை சொன்னேன். ஆய்வாளா் விசாாித்த போது நான் சம்பவ இடம் சென்றதயும் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் பாா்வையிட்டு பாா்வை மகஜா் வரைபடம் தயாா் செய்த விபரத்தை சொன்னேன். பாா்வை மகஜாில் ஜெயராஜ், குணசேகா் ஆகியோாிடம் கையொப்பம் பெற்ற விபரத்தை சொன்னேன். அ சா ஆ 4 வரைபடத்தில் சாட்சிகளின் கையொப்பம் இல்லை என்றால் சாிதான். அ சா ஆ 2 பாா்வை மகஜாில் நான் சொல்லும் ஜெயராஜ், குணசேகா் கையொப்பங்கள் இல்லை என்றாலும் அன்பழகன் மற்றும் கலியமூா்த்தின் கையொப்பங்கள் உள்ளன என்றாலும் சாிதான். பாா்வை மகஜாில் கையொப்பம்

செய்துள்ள அன்பழகன் மற்றும் கலியமூர்த்தியை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜரில் கையொப்பம் இடாத ஜெயராஜ், குணசேகரை எனது சுயவிருப்பத்தின் பேரில் சாட்சியாக சேர்த்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிடபட்டுள்ள சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள வீடுகளில் உள்ள நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சி நிர்மலா என்பவரை விசாரித்துள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் தேதி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அதில் 13, 14, 15 காலங்கள் பூர்த்தி செய்யபடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் புலன் விசாரணை அதிகாரி நான் தான். முதல் தகவல் அறிக்கையில் சம்பவ நேரம் 26/02/2016 மாலை 16 மணி என சொல்லபட்டுள்ளது. தகவல் கிடைத்த நேரம் 26/02/2016 இரவு 22 மணி என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் 5 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு 6 மணி நேரம் காலதாமதம் ஆனதற்கான காரணத்தை நான் விசாரித்தேன். என்னை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றாலும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புகார் பெற்று 1 மணி நேரத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். எதிரிகள் இதச பிரிவு 307ன் கீழ் இறுதி அறிக்கையை நான் சமர்பிக்கவில்லை. அ சா 1 புகாரிலோ எனது விசாரணையிலோ எதிரிகள் தன்னை காமகுரோதமான வார்த்தைகளால் பொது இடத்தில் திட்டியதால் தனக்கு மான நஷ்ட்டம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ சா 1 எனது விசாரணையில் 1ம் எதிரி வீட்டிற்குள் சென்று வீச்சறுவாலை எடுத்து வந்து காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி இத்தோடு துளைந்து போடா என சொல்லி கழுத்தை நோக்கி விசியதாகவும் அ சா 1 தலையை குணிந்து அதிஷ்ட வசமாக உயிர் தப்பியதாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அரிவாலால் வெட்ட வந்ததாக சொன்னார். 2 முதல் 4 எதிரிகள் அ சா 1ஐ கம்பால் அடித்ததாக எனது விசாரணையில் அ சா 1 சொல்லவில்லை. 1ம் எதிரி அ சா 1ஐ வழிமறித்து முகத்தில் குத்தி கீழே தள்ளியதாக புகாரிலோ எனது விசாரணையிலோ அ சா 1 சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அ சா 1ஐ குடும்பத்தோடு காலி செய்துவிடுவதாக மிரட்டியதாக புகாரிலோ எனது விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் வீராசாமி மகன் சேகர் வடமலை மகன் இளங்கோவன் சமாதானம் செய்து அனுப்பி வைத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ சா 1 எனது விசாரணையில் மருத்துவ மனை சென்று சிகிச்சை பெற்றதால் புகார் கொடுக்க காலதாமதம் ஆனதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ சா 1 சம்பவத்திற்கு பிறகு மருத்துவ மனையில் உள்நோயாளியாகவோ வெளிநோயாளியாகவோ சிகிச்சை பெற்றதாக எனது

விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து எந்த ஆயுதமும் கைபற்றபடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகள் யாரும் கைது செய்யபடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு மறுநாள் மாலை 7 மணிவரை நான் பணியில் இருந்தேன். அ சா 1 ரகுவர்மா மற்றும் 8 நபர்கள் மீது 27/02/2016 அன்று குற்ற எண் 30/2016ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்ட விபரம் எனக்கு தெரியும். அ சா 1ன் மீது பொது சொத்துகள் அழிப்பு தடை சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்டதால் அ சா 1 கொடுத்த புகாரில் இதச பிரிவு 307ஐ சேர்த்து அமர்வு வழக்காக அ சா 1க்கு ஆதரவாக நானும் ஆய்வாளரும் சேர்ந்து செயல்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அந்த குற்ற எண் 30/2016ல் மூன்றாம் எதிரியான அ சா 1ன் சகோதரர் ராஜராஜன் மற்றும் 6ம் எதிரி ரவி காவல் துறையில் பணியாற்றியதாலும் ராஜராஜன் பாலையூர் காவல் நிலையத்தில் பணியாற்றியதாலும் அவர்களுக்கு ஆதரவாக இந்த வழக்கை அமர்வு வழக்காக பின்னிட்டு மாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல. சாட்சிகளை சம்பவத்திற்கு மறுநாள் தான் விசாரித்தேன். நான் சொல்வது போல் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் முதல் கட்ட விசாரணையை மேற்கொள்ள ஆய்வாளர் உத்தரவுயிட்டார். நானே புகார பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆய்வாளர் சொல்லி இவ்வழக்கை விசாரித்ததாக ஆய்வாளர் என்னை விசாரித்த போது சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கையை 29/02/2016 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அ சா 1 ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்பதற்கு வட்டார வளர்ச்சி அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.